பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 20 வியாழக்கிழமை 03.02.2022 கதிர் 316

## மீனவர் போராட்டத்துக்கு நீதிமன்றம் தடை உத்தரவு

(ந.லோகதயாளன்)

இந்திய மீனவர்களின் அத்துமீறல் மற்றும் அட்டூழியங்களுக்கு எதிராக பருத்தித்துறை - சுப்பர்மடம் மீனவர்களின் போராட்டத்துக்கு நீதிமன்றம் தடை உத்தரவு கட்டளை வழங்கியுள்ளது.

☞2

# கடற்தொழில் அமைச்சரின் சமரச முயற்சி தோல்வியில்; தொடர்ந்தும் முற்றுகைக்குள் யாழ். மாவட்ட செயலகம்!

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு இன்று மீனவர்கள் முன்னெடுத்து வரும் போராட்டக் களத்துக்குக் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரடியாகச் சென்று மீனவர்களுடன் பேச்சுக்களை நடத்த முயற்சித்தபோது, மீனவர்கள் சமரசத்துக்கு சம்மதிக்காத நிலையில் அமைச்சர் திரும்பிச் சென்றார்.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி வரும் இந்தியப் படகுகளை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனும் உத்தரவை எழுத்துமூலமாகத் தர வேண்டும் என மீனவர்களால் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

☞2



# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்கக் கோரிக்கை

## மக்கள் கையெழுத்துப் போராட்டத்தை தொடக்கி வைத்தார் சுமந்திரன் எம்.பி.

(ந.லோகதயாளன், ச.தவசீலன்)

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்கக் கோரி பொதுமக்கள் கையெழுத்துப் போராட்டத்தை முல்லைத்தீவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் இன்று முல்லைத் தீவு ஊடக அமையத்தில் தொடக்கி வைத்தார். அங்கு ஊடக சந்திப்பையும் அவர் நடத்தினார்

இதில் நடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், எஸ்.சுகிர்தன் மற்றும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் இளைஞர் அணித்தலைவர் கி.சேயோன் ஆகியோரும் கலந்துகொண்டு கையெழுத்துப் போராட்டத்தைத் தொடக்கி வைத்தனர்.

☞2

## மாதகல் மீனவர்களும் போராட்டத்தில் குதிப்பு



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலைக் கண்டித்து இன்றுயாழ்ப்பாணம்-மாதகலில் வீதியை முடக்கி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாதகல் கிராமிய கடற்றொழில் அமைப்புகளைச் சேர்ந்தோர் இணைந்து துறைமுக

☞2



## சிங்கள பெரும்பான்மையினப் பிரதேசங்களாக வடக்கு, கிழக்கையும் மாற்றும் சூழ்ச்சித் திட்டம்

### ஜெனிவாக் கூட்டத் தொடருக்கு சம்பந்தன் எழுதிய கடிதத்தில் விவரிப்பு

விரிவான செய்தி 07ஆம் பக்கத்தில்

## தேசிய சுதந்திர தின நிகழ்வை புறக்கணிக்கின்றார் பேராயர்!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும் தேசிய சுதந்திர தின நிகழ்வில் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இம்முறை கலந்து கொள்ளமாட்டார்.

கத்தோலிக்க சபையின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை

☞2



## அருந்திக்கவின் மகன் உட்பட 7 பேர் மறியலில்

ராகம பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் இடம்பெற்ற மோதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவின் மகன் உள்ளிட்ட 7 பேர் எதிர்வரும் 7ஆம் திகதி வரை

☞2

## சுப்பர்மடம் போராட்டக்களத்துக்கும் கடும் பாதுகாப்புடன் சென்ற டக்ளஸ்!

### குழப்பத்தில் முடிந்த சந்திப்பு; வெளியேறிய அமைச்சர்



(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

பருத்தித்துறை, சுப்பர்மடம் பகுதியில் மீனவர்கள் தொடர் போராட்டம் முன்னெடுத்துவரும் இடத்துக்கு கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இன்று சென்றிருந்தபோதும் எந்தவிதமான முடிவுகளும் எட்டப்படாத நிலையில் வெளியேறினார்.

இந்திய மீன்பிடிப் படகுகளின் அத்துமீறலைக் கண்டித்தும், வத்திராயன்

☞2



## அருந்திக்கவின் மகன் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

23 வயதான இராஜாங்க அமைச்சர் ஒருவரின் மகன் நேற்றிரவு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

குறித்த தாக்குதல் சம்பவத்தில் நான்கு மருத்துவபீட மாணவர்கள் காயமடைந்துள்ளனர். அவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

## தேசிய சுதந்திர தின ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிறில் காமினி பெர்னாண்டோ, கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது இந்தத் தகவலை வெளியிட்டார்.

அத்துடன், சுதந்திர தினத்தன்று பேராயரின் பங்கேற்புடன் நடத்தப்படும் தேவ ஆராதனையும் இடம்பெறாது எனவும் அவர் கூறினார்.

பொரளையில் தேவாலயமொன்றில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் இடம்பெறவில்லை எனச் சுட்டிக்காட்டி, அதற்கு எதிர்ப்பை வெளியிடும் விதத்திலேயே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார்.

## மாதகல் மீனவர்களும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சந்தியில் படகுகள், வலைகளை வீதியில் வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துமீறும் இந்திய மீனவர்களைப் படகுகளுடன் கைதுசெய்யக் கோரியும், வத்திராயனில் இந்திய ரோலர் படகு மோதி உயிரிழந்த இரண்டு மீனவர்களுக்கு நீதி கோரியும் இந்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சுப்பர்மடம் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பகுதியில் சடலமாக மீட்கப்பட்ட இரண்டு மீனவர்களுக்கு நீதி கோரியும் சுப்பர்மடம் பகுதியில் தொடர்ந்து நான்காவது நாளாகவும் மீனவர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில் பல தரப்பினரும் போராட்டம் இடம்பெறும் இடத்துக்குச் சென்று மீனவர்களுடன் பேச்சுகளை முன்னெடுத்த போதும் எந்தவிதமான உடன்பாடுகளும் எட்டப்படாத நிலையில் இன்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சென்று பேச்சுகளை முன்னெடுத்திருந்தார்.

இதன்போது இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி வரும் இந்திய படகுகளை நிரந்தரமாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனும் உத்தரவாதத்தை எழுத்து மூலமாகத் தர வேண்டும் என மீனவர்களால் அமைச்சரிடம் கோரிகை முன்வைக்கப்பட்டது.

இதற்குப் பதில் வழங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எழுத்து மூலமான உத்தரவாதம் தர முடியாது எனவும், தான் வாய்மூலமாகவே உத்தரவாதத்தையே தர முடியும் எனவும் கூறியதை அடுத்து அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

பின்னர் போராட்டக் களத்தில் இருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியேறிய நிலையிலும் மீனவர்கள் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

போராட்டம் இடம்பெறும் பகுதியில் பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய சுதந்திர தின ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரிய கையெழுத்துப் போராட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.,

இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மிகமோசமான சட்டமாக இருக்கின்றது. இது 6 மாத காலத்துக்கு தற்காலிக சட்டமாகக் கொண்டுவரப்பட்டது. ஆனால், 42 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கின்றது. விசேடமாக தமிழ் இளைஞர்களை நசுக்குகின்ற - ஒடுக்கி ஆழ்கின்ற சட்டமாக சர்வதேச விழுமியங்கள் எல்லாவற்றையும் புறந்தள்ளிச் செயற்படும் சட்டமாக இது இருக்கின்றது.

இது நீக்கப்படும் என்று இலங்கை அரசு தெளிவாக சர்வதேச சமூகத்துக்கு வாக்குறுதி கொடுத்துள்ளது. அவ்வாறு நீக்குவதற்கான முயற்சியும் சென்ற அரசின் காலத்தில் இடம்பெற்றுள்ளது. அது முழுமை பெறவில்லை. ஆனால், தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தைச் சீர்திருத்துகின்றோம் என்று சொல்லி எந்த வித உப்புச்சப்பில்லாத ஒரு சீர்திருத்தமாக அறிவிக்கப்படுகின்ற ஒரு வர்த்தமானி பிரசுரம் வந்துள்ளது.

அது நடைமுறையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் அமுலில் எந்த மாற்றத்தையும் செய்யப் போவதில்லை. ஆகவே, சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கு - விசேடமாக ஐரோப்பிய ஒன்றியத்தை ஏமாற்றுவதற்கும் எதிர்வரும் 28 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக் கூட்டத்தொடர் ஆரம்பமாக இருக்கின்றது; அவர்களையும் ஏமாற்றலாம் என்ற எண்ணத்தில் இது செய்யப்படுகின்றது. அவர்கள் எல்லோருக்கும் விளக்கமாக விடயங்களை அறிவித்துள்ளோம்.

இந்தத் தருணத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவோம் என்று அரசு கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும். அந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்று முழுதாக நீக்கப்பட வேண்டும் என்று எங்கள் மக்கள் நேரடியாகவே கோருகின்ற ஆவணத்தில் கையெழுத்திட்டு இதற்கான போராட்டத்தை ஆரம்பித்து வைக்கின்றோம்.

இது எட்டு மாவட்டங்களிலும் மக்களிடத்தில் வீடு வீடாகச் சென்று வீதி வீதியாகச் சென்று மக்களின் கையெழுத்து வாங்கி இன்று ஆரம்பித்து வைக்கின்றோம். தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி கையெழுத்துப் போராட்டத்தை மக்களிடத்தில் முன்கொண்டு செல்லவுள்ளது.

யாழில் நடைபெறுகின்ற மீனவர்களின் போராட்டத்தைக் கருத்தில்கொண்டு அந்தப் போராட்டம் ஒரு முடிவு வந்த பின்னர் கையெழுத்துப் போராட்டத்தை முழுவீச்சாகச் செயற்படுத்துவோம் - என்றார்.

## கடற்தொழில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதற்குப் பதில் வழங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எழுத்துமூலமான உத்தரவாதம் தர முடியாது எனவும், தான் வாய்மூல உத்தரவாதத்தையே தர முடியும் எனவும் கூறியதை மீனவர்கள் ஏற்க மறுத்தனர்.

அதனால் போராட்டக்களத்தில் இருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியேறிய நிலையிலும் மீனவர்களின் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

## மீனவர் போராட்டத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மீனவர்களுடன் இன்று நடத்திய பேச்சு முடிவின்றி நிறைவடைந்த நிலையில் பொலிஸார் தாக்கல் செய்த தடை உத்தரவு விண்ணப்பத்துக்கு நீதிமன்றம் அனுமதியளித்து கட்டளை வழங்கியது.

கடந்த வாரம் வடமராட்சி கடற்பரப்புக்குள் அத்துமீறி தொழிலில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள், உள்ளூர் மீனவர்களின் வலைகளையும் அறுத்து நாசப்படுத்தினர்.

அத்துடன், கடலுக்கு தொழிலுக்குச் சென்ற வடமராட்சி கிழக்கு மீனவர்கள் இருவர் சடலமாக கரை ஒதுங்கினர்.

இந்தச் சம்பவங்களை அடுத்து பருத்தித்துறை சுப்பர்மடம் மீனவர்கள் ஆரம்பித்த போராட்டம் இன்று பல பகுதிகளுக்கும் விரிவடைந்துள்ளது.

இந்தநிலையில், மாணவர்களின் கல்விக்கு இடையூறு, போக்குவரத்துக்குத் தடை என்பவற்றைச் சுட்டிக்காட்டி பொதுத் தொல்லையின் கீழ் பொலிஸார் செய்த விண்ணப்பத்துக்கு அமைய போராட்டத்துக்கு தடை உத்தரவு வழங்கி இன்று மாலை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டது.

விளம்பரத் தொடர்புகளுக்கு-
தொலைபேசி இலக்கம்-
076 443 8622






நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# எதிர்ப்பைக் காட்டுவோம்

**இலங்கையின் 74 ஆவது சுதந்திரதினம் நாளை.**

**இந்தத் தீவின் பௌத்த – சிங்களப் பெருந் தேசிய வாதத்துக்குள் அகப்பட்டிருக்கும் தமிழர் தேசம் அடிமைத் தனத்தோடு சிங்கள தேசியத்தின் சுதந்திர தினத்தை நோக்கும் நிலையில் உள்ளது.**

**தமிழர் தேசத்தின் – தமிழ் மக்களின் – பல்வேறு சுதந்திரங்களும் மறுக்கப்பட்டு, அவர்களின் சுதந்திர உரிமைகள் மீது ஏறி நின்றபடிதான் இந்த சுதந்திர நாளை கொழும்பு கொண்டாடுகின்றது என்பதை உல குக்குப் பறைசாற்றுவிக்க, தமிழர் தரப்பு நாளை கன காத்திரமாக நடவடிக்கை எடுக்கத் திட்டமிட்டிருக்கின்றது.**

**தமிழர்களிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கும் பல்வேறு சுதந்திரங்களில் முக்கியமானதொன்று மத சுதந்திரம். தொல்லியல் திணைக்கள நடவடிக்கை என்ற பெயரில் தமிழர்களின் மத இடங்களை ஆக்கிரமிப்பதும் அந்த இடங்களில் தங்களின் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற் காக புத்தர் சிலைகளை முளைக்கச் செய்வதும் பேரின வாதத்தின் இப்போதைய தந்திரோபாயம்.**

**அதற்கு எதிராக இலங்கைத் தீவின் மேற்படி சுதந்திர தினத்தின் போது நடவடிக்கை மேற்கொண்டு உண்மை நிலையை உலகுக்கு உணர்த்த அரசியல், சிவில் சமூகத்தவர் கள் தயாராகியிருக்கின்றார்கள்.**

**அலம்பில் சந்தியில் இருந்து குருந்தூர்மலை வரை நாளை காலை நடைபவனியாகப் போய் குருந்தூர் மலையில் தமது வழிபாடுகளை நடத்துவதற்கு – தமது பாரம்பரிய புனித ஸ்தலத்தில் பூஜை, புனஸ்காரங்களை மேற்கொள்வதற்கு – தமிழ் மக்கள் முடிவு செய்திருக்கின் றார்கள்.**

**கொழும்பில் பௌத்த – சிங்கள ஆட்சியாளர்கள் தங் களது வண்ணமிகு சுதந்திர தினப் பேரணியை முப்படைக ளின் இறுமாப்புடன் முன்னெடுக்க, அடக்கப்பட்ட தமிழி னம் தனது வழிபாட்டுரிமையை நிலை நிறுத்துவதற்கு குருந்தூர் மலைநோக்கி கால்நடை பவனியாகப் போகப் போகின்றது.**

**அதற்கு சிங்கள அரசின் பொலிஸும் படைத்தரப்பும் அனுமதிக்குமா, கொவிட் கட்டுப்பாடு என்ற பெயரில் நீதி மன்றத் தடை உத்தரவு பாயுமா, வேறு வழிமுறைகளில் தடை விதிக்கப்படுமா என்பவை குறித்தெல்லாம் இனித் தான் தெரியவரும்.**

**எனினும் சுமந்திரன், ஸ்ரீதரன், சாணக்கியன் உட்பட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்ற இருக்கின் றமையால் இந்தப் பேரணி உறுதியானதாக செயற்படும் என்று நம்பமுடியும்.**

**கடந்த 29 ஆம் திகதி கிளிநொச்சியில் சிவகரன் தலைமையில் நடந்த தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக் கத்தின் கூட்டத்தில் கட்சிகள் கடந்து எடுக்கப்பட்ட தீர்மா னத்திற்கு வடிவம் கொடுப்பதே நாளைய பேரணி. அத னால் கட்சிகள் கடந்து தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அனைத்துத் தரப்புகளும் இதில் பங்குபற்றும் என எதிர்பார்க்கலாம்.**

**காலை 6 மணிக்கு நடைபெறும் இந்தப் பேரணியின் பின்னர் இந்தப் பொது அமைப்புகள், காணாமலாக்கப்பட் டோரின் உறவுகள் இணைந்து முள்ளிவாய்க்காலில் நடத்தப்போகும் எதிர்ப்பு இயக்கமும் தமிழினம் அடிமைப் படுத்தப்பட்டிருப்பது பற்றிய செய்தியை உலகுக்கு எடுத் துச் சொல்லும் என்று நம்பலாம்.**

**இதே சமயம் தமிழர்கள் மீது நாற்பத்திமூன்று ஆண்டு களுக்கு மேல் திணிக்கப்பட்டிருக்கும் கொடூரமான – மிக மோசமான – பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரும் கையெழுத்து இயக்கம் ஒன்றும் ஆரம் பிக்கப்பட்டிருக்கின்றது.**

# காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் கரி நாளாக சுதந்திரதினம் அனுஷ்டிப்பு!

## சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவிப்பு

**(மன்னார் நிருபர்)**

இலங்கையின் சுதந்திர தினமான நாளை (வெள்ளிக்கிழமை) வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங் கள் சுதந்திர தினத்தை கரி நாளாக அனுஷ்டிப் பதாக மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங் களின் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னாரில் இன்று (வியாழக்கிழமை) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கை சுதந்திர தினம். வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகளாகிய நாங்கள் அந்த நாளைக் கரி நாளாக அனுஷ்டிக்க இருக் கிறோம்.

எங்களுடைய உறவுகளுக்காக வீதி களில் நின்று போராட்டங்கள் செய்து எந்த ஒரு பிரயோசனமும் இல்லாத நிலையில் இந்த சுதந்திர தினத்தில் கரி நாளாக நாங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க் கால் முற்றத்தில் நாளை (வெள்ளிக்கிழமை) 10 மணிக்கு அனுஷ்டிக்க இருக்கிறோம்.

அதனால் வீதிகளில் நின்று போராடும் தாய்மாார்களுக்கு வலுச் சேர்ப்பதற்காக வர்த் தகசங்கங்கள், பள்ளி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், தனியார் நிறுவனங்கள், அரசியல்வாதிகள், சமூக நிறுவனங்கள், சமூகத் தொண்டர்கள், மனித உரிமை செயற் பாட்டாளர்கள், அனைவரும் முள்ளிவாய்க் கால் முற்றத்தில் எம்மோடு வந்து நின்று எமக்கு ஆதரவு தர வேண்டும்.

மேலும் ஒவ்வொரு மாவட்டமாக நீதிய மைச்சர் வருகை தந்தார். ஆனால், அவர் நீதி அமைச்சராக வரவில்லை. நிதியமைச்சர் ஆகவே வந்தார். அதனால் சில மாவட்டங் களில் அவரைச் சந்திப்பதையும் நாங்கள் தவிர்த்துக் கொண்டோம்.

அவருக்குத் தெரியும் நாங்கள் நிதிக்காகப் போராடவில்லை. எங்களுடைய உறவுகளுக் காகப் போராடுகிறோம் என்று.

அதே போல் மன்னாருக்கு 13 திணைக் களங்கள் வருவதாக இருந்தன. இறுதியில் வந்தவை 7 திணைக்களம். அதில் ஓ. எம். பி. மன்னாருக்கு வந்து 4 வருடங்கள் ஆகின் றது.

இன்று வரை அது எந்த ஒரு செயற்பாடு களையும் செய்யவில்லை. அது அரசாங்கத் துக்கும் தெரியும். இருந்தும் ஜனாதிபதி , நீதி அமைச்சரை அனுப்பி ஒவ்வொரு மக்களாகச் சந்தித்து வருகின்ற ஜெனிவா கூட்டத்தொடரில் அரசாங்கத்துக்கு சாதகமாக மாற்றுவதற்கு செயற்பட்டு வருகிறார் என அறிய முடிகிறது.

எனவே நாங்கள் இங்குள்ள இலங்கை அரசாங்கத்தை நம்பவில்லை. எங்களுக்கு சர்வதேச நீதி வேண்டும்.

ஆகவே தான் வர இருக்கின்ற சுதந்திர தின நிகழ்வின் போது முள்ளிவாய்க்கால் முற்றத்தில் கரி நாளாக அனுஷ்டிக்க இருக்கி றோம்.

இந்த நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டு எமக்கு ஆதரவு தந்து வலுச்சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். -என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க பிரதி நிதிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அபிவிருத்தி செயற்பாடு மேற்பார்வை செய்ய நிபுணர்களின் உதவி அவசியம்

## பிரதமர் திட்டவட்டம்



நாட்டின் அபிவிருத்தி செயற்பாடு களை மேற்பார்வை செய்வதற்கு நிபுணர்களின் உதவி அவசியமானது எனவும், நாட்டின் அபிவிருத்திக்கு எதிர்காலத்திலும் நிபுணர்களின் உதவியை அரசாங்கம் எதிர்பார்ப்ப தாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித் தார்.

இலங்கை தொழில் வல்லுனர்கள் சங்கத்தின் புதிய செயற்குழு உறுப்பினர்கள் அலரி மாளிகையில் சந்தித்த போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது இலங்கை தொழில் வல் லுநர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் கள் பிரதமருக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர்.

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்களை உள்ள டக்கிய தொழில் வல்லுனர்கள் சங்கத்தில் முப்பத்திரெண்டு தொழில்களை பிரதிநிதித் துவப்படுத்தி 52 தொழிற்சங்கங்கள் காணப் படுவதுடன், அரசாங்கம் முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களுக்கு அரசாங்கம் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் நிபுணர் களின் உதவியை பெற்றுக் கொடுப்பதற்கு தயாராகவிருப்பதாக இலங்கை தொழில் வல்லுனர்கள் சங்கத்தின் தலைவர் துலித் பெரேரா இதன்போது தெரிவித்தார்.

அமைச்சுக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் இணைந்து நாட்டின் பொருளாதாம் மற்றும் அபிவிருத்திக்காக செயற்படுமாறு கேட்டுக்கொண்ட பிரதமர், நிபு ணர்களாக நாட்டுக்காக மேற்கொண்ட உதவிகளுக்கு பாராட்டும் தெரிவித்தார்.

நாட்டின் எதிர்காலத்திற்காக ஒரு அர சாங்கம் என்ற ரீதியில் பெற்றுக்கொடுக்கக் கூடிய ஒத்துழைப்பை தொழில் வல்லுநர்கள் சங்கத்திற்கும் பெற்றுக் கொடுப்பதற்கும் நட வடிக்கை மேற்கொள்வதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

# கார் உற்பத்திகள் தொடர்பில் கவனம் செலுத்துகிறார் பஸில்



இலங்கையில் கார் உற்பத்தி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண் டுமென நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

வாகன இறக்குமதியை ஆரம்பிப்பது தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப் பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்காலத்தில் மின்சார வாகனங்களுக்கு முன்னுரிமை வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 9 ஆவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வின் ஆரம்ப நாளின் போது தனது கொள்கைப் பிரகடனத்தில் தெரிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பிரேசிலிவில் கனமழை,வெள்ளம் நிலச்சரிவில் சிக்கி 24 பேர் பலி



பிரேசில் நாட்டின் சயோ பலோ மாகாணத்தில் கடந்த சில நாள்களாக கனமழை கொட்டித்தீர்த்து வருகிறது. இதனால், ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கனமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில், வெள்ளம், நிலச்சரிவு காரணமாக 5 லட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், சயோ பலோவில் பெய்து வரும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 24 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், இந்த இயற்கை பேரிடரில் சிக்கி 100இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி பலர் மாயமாகியுள்ளதால் அவர்களை தேடும் பணிகள் மீட்புக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

## அமெரிக்காவின் அச்சுறுத்தலுக்கு பணிந்து பின்வாங்கப் போவதில்லை ரஷ்யா அதிரடி அறிவிப்பு



அமெரிக்காவின் அச்சுறுத்தலைக் கேட்டு நாங்கள் பின்வாங்கப் போவதில்லை' என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

ஆயிரக்கணக்கான வீரர்களை உக்ரைனின் எல்லையில் ரஷ்யா நிறுத்தியதால் ரஷ்யா - உக்ரைன் எல்லையில் பதற்றம் நிலவியது. ரஷ்யாவின் இந்த நடவடிக்கையை பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் கடுமையாக விமர்சித்தன. உக்ரைன் மீது ரஷ்யா படை எடுத்தால், ரஷ்ய அதிபர் புதினுக்கு நெருக்கமாக உள்ள வர்கள் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்று திங்கள்கிழமை அமெரிக்கா எச்சரித்தது.

அமெரிக்காவின் எச்சரிக்கை குறித்து வாஷிங்டனில் உள்ள ரஷ்யா தூதரகம், அமெரிக்காவுக்கு விடுத்துள்ள அறிவிப்பில், அமெரிக்காவின் அச்சுறுத்தலை கேட்டு நாங்கள் பின்வாங்கப் போவதில்லை. எங்களது படை வீரர்கள் யாரையும் அச்சுறுத்துவதில்லை. எங்களது படைகளை அதன் எல்லைக்குள் நகர்த்துவது ரஷ்யாவின் இறையாண்மை உரிமை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், உக்ரைன் விவகாரம் தொடர்பாக, ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் லாவ்ரோவ் மற்றும் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஆண்டனி ப்ளிங்கன் ஆகியோர் தொலைபேசி வாயிலாக உரையாடினர். இந்த உரையாடல் குறித்த விவரம் இதுவரை வெளியாகவில்லை.

சோவியத் யூனியன் என்ற அமைப்பில் இருந்த பெரிய நாடுகளில் ஒன்று உக்ரைன். மொழி, கலாச்சார அடையாளத்தில் ரஷ்யாவுடன் சில பிரதேசங்கள் ஒத்துப்போவதால் உக்ரைனை ரஷ்யா தன்னுடைய அங்கமாகவே கருதுகிறது. ஆனால், அந்த நாட்டு மக்களோ தங்களை ஐரோப்பாவின் பிற நாடுகளுடன் அடையாளப்படுத்த விரும்புகின்றனர்.

பொருளாதாரத்தில் வளரும் நாடு உக்ரைன். மனித ஆற்றல் வளர்ச்சியில் உலகத்தில் 74வது இடத்தில் இருக்கிறது. வறுமையும் ஊழலும் அதிகம். வளமான விவசாய நிலம் இருப்பதால் வேளாண் பொருள் ஏற்றுமதியில் முக்கியமான நாடாகத் திகழ்கிறது. ராணுவ பலத்தில் ரஷ்யா, பிரான்சுக்கு அடுத்து வருகிறது. குடியரசு நாடு, அதிபர் தலைமையிலான ஒற்றை ஆட்சி முறை நிலவுகிறது. நீதித்துறை, அரசு நிர்வாகத்துறை, சட்டமியற்றும் நாடாளுமன்றம் ஆகிய மூன்று முக்கிய உறுப்புகளைக் கொண்டிருக்கிறது. அதிபராக விளாடிமிர் ஜெலன்ஸ்கி. பிரதமராக டெனிஸ் மைஹால் ஆகியோர் உள்ளனர்.

இந்த நிலையில் 'நேட்டோ' நாடுகள் கூட்டமைப்பில் இணைய ரஷ்யாவின் அண்டை நாடான உக்ரைன் ஆர்வமாக இருந்து வருகிறது.

இதற்கு அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஆனால், இதற்கு ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்தது. இதனைத் தொடர்ந்து கடந்த சில மாதங்களாக உக்ரைன் - ரஷ்யாவுக்கு இடையே மோதல் வலுத்து வருகிறது.



## கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு மீண்டும் கொரோனாத் தொற்று உறுதி!

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்று ஏற்பட்டுள்ளது எனப் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'தற்போது பெரிய அளவில் பாதிப்பு இல்லை, நலமாக உள்ளேன். வீட்டில் இருந்தே ஒன்லைன் மூலமாக எனது பணிகளை கவனித்துக் கொள்கின்றேன். மக்கள் அனைவரும் தவறாமல் தடுப்பூசி மற்றும் பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும்' என கூறியுள்ளார்.

ஏற்கனவே தனது குழந்தைகளில் ஒருவர் கொவிட்-19 தொற்றுக்கு நேர்மறை சோதனை செய்ததை அடுத்து, அவர் தொலைதூரத்தில் இருந்து தனது பணியை முன்னெடுத்து வந்தார். 5 நாள்கள் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டிருந்தார் என வியாழக்கிழமை ஜஸ்டின் கூறியிருந்தார். பின்னர் அவருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டதில், வைரஸ் தொற்று இருப்பது தெரியவந்துள்ளது.

இதற்கு முன்பு, ட்ரூடோவின் மனைவிக்கு கொரோனா தொற்று ஏற்பட்டபோதும், வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டார். இதனிடையே கனடாவில் கட்டாய தடுப்பூசிக்கு எதிராக தலைநகர் ஒட்டாவாவில் ஆயிரக்கணக்கானோர் திரண்டதையடுத்து, பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பாதுகாப்பான இடத்துக்கு வெளியேறியிருந்தார். இந்த நிலையிலேயே அவருக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது

## ஈக்குவடோரில் கன மழை 11 பேர் உயிரிழப்பு!

ஈக்குவடோர் தலைநகர் கீட்டோவில் பெய்த கன மழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், பல கார்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது எனவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உள்ளூர் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனஎனவும் குறிப்பிடப்படுகின்றது.

மின்கம்பிகள் அறுந்து விழுந்துள்ளமை காரணமாக, நகரின் சில பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது எனவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுமார் 20 ஆண்டுகளுக்கு பிறகு, ஈக்குவடோரைத் தாக்கிய மிகக் கடுமையான வெள்ளம் இதுவெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# சட்டம் 370 ரத்துக்குப் பின் ஜம்மு காஷ்மீரில் 541 பயங்கரவாத தாக்குதல் நடந்துள்ளன

ஜம்மு காஷ்மீரில் சட்டப் பிரிவு 370 ரத்து செய்யப்பட்ட பிறகு 541 பயங்கரவாத தாக்குதல் நிகழ்ந்துள்ளது என்றும், அதில் பொதுமக்கள் 98 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சகம் தகவல் தெரிவித்துள்ளது. ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் சட்டம் 370 ரத்து செய்யப்பட்டதற்கு பிறகு பயங்கரவாத தாக்குதல் அதிகரித்துள்ளதா?, என்பது தொடர்பாக மாநிலங்களவையில் உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு மத்திய உள்துறை இணை அமைச்சர் நித்தியானந்த ராய் பதிலளித்திருந்தார்.

அப்போது அவர், ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் சட்டப்பிரிவு 370 ரத்து செய்யப்பட்ட தினம் தொடங்கி இன்று வரை, அதாவது 2019 ஒகஸ்ட் 5 ஆம் தேதி முதல் 2022 ஜனவரி 26 ஆம் திகதி வரை ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் 541 பயங்கரவாத தாக்குதல்கள் நடந்து உள்ளன. இந்த தாக்குதலின் போது 98 பொது மக்களும், 109 பாதுகாப்பு படையினரும் உயிரிழந்துள்ளனர். இதே காலகட்டத்தில் பாதுகாப்பு படையினரால் 439 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர், என குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த தாக்குதல்களில் பொதுச் சொத்துக்கள் எதுவும் சேதப்படுத்தப்படவில்லை என்றும், தனிநபரின் சொத்துக்கள் கிட்டத்தட்ட 5.3 கோடி ரூபா அளவுக்கு சேதப்படுத்தப்பட்டுள்ளன என மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# அனைத்திந்திய சமூகநீதிக் கூட்டமைப்பில் இணைய 34 கட்சித் தலைவர்களுக்கு மு.க.ஸ்டாலின் கடிதம்




தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் கடந்த மாதம் 26 ஆம் திகதி, குடியரசு நாளன்று காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றியிருந்தார்.

அப்போது, நாடு முழுவதும் சமூக நீதிக் கொள்கையை முன்னெடுத்து, பிற்படுத்தப்பட்ட பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் இட ஒதுக்கீடு உள்ளிட்ட நலன்களைப் பாதுகாத்திட அனைத்திந்திய சமூகநீதிக் கூட்டமைப்பு தொடங்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

அதன்படி, இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, லல்லு பிரசாத் யாதவ் (ராஷ்டிரிய ஜனதா தளம்), பரூக் அப்துல்லா (ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாடு), சரத் பவார் (தேசியவாத காங்கிரஸ்), டி. ராஜா (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), சீதாராம் யெச்சூரி (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட்) உள்ளிட்ட பிற மாநில, தேசியக் கட்சியினருக்கும், ஓ. பன்னீர் செல்வம் (அ.இ.அ.தி.மு.க), வைகோ (ம.தி.மு.க), ராமதாஸ் (பா.ம.க), தொல். திருமாவளவன் (வி.சி.க), ஜவாஹிருல்லா (ம.ம.க), ஈ.ஆர். ஈஸ்வரன் (கொ.ம.தே.க) போன்ற தமிழகத்தை மையமாகக் கொண்டு செயற்படும் கட்சிப் பிரதானிகளுக்கும் கடிதமொன்றை அனுப்பி, அனைத்திந்திய சமூகநீதிக் கூட்டமைப்பில் இணையுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.




# இலங்கைக்கு 40,000 மெட்ரிக் தொன் எரிபொருள் வழங்குவதற்கு இந்தியன் ஒயில் நிறுவனம் முடிவு

அந்நியச் செலாவணிப் பற்றாக் குறையால் இலங்கை கடும் பொருளாதார நெருக்கடியில் தவித்து வருகிறது. இதை சமாளிக்க பல்வேறு நாடுகளிடம் கடன் பெற்றுவருகிறது. கடந்த மாதம் உணவுப் பொருள் இறக்குமதி செய்வதற்காக இலங்கை அரசுக்கு 6,700 கோடி ரூபா கடனுதவி வழங்குவதாக இந்தியா அறிவித்தது.

இந்த நிலையில், தற்போது இலங்கைக்கு தேவையான எரிபொருள்களை இந்தியன் ஒயில் நிறுவனத்திடம் இருந்து வாங்கப்போவதாக அந்தநாட்டு அரசு அறிவித்துள்ளது.

இலங்கையில் எரிபொருள் இல்லாமல் அனல் மின் நிலையங்களின் இயக்கம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், அந்தநாடு முழுவதும் முக்கிய நேரங்களில் மின் வெட்டு அமல்படுத்தப்படுகிறது. இந்த நிலைமையைச் சீர் செய்ய, நாட்டின் எரிபொருள் தேவைக்காக பெட்ரோல், டீசலை வழங்குமாறு இலங்கை அரசு இந்தியன் ஒயில் நிறுவனத்தின் துணை நிறுவனமான இலங்கை இந்தியன் ஒயில் நிறுவனத் துடன் பேச்சுவார்த்தை நடத்தியது. இந்தப் பேச்சுவார்த்தையில் இலங்கைக்கு சுமார் நாபதாயிரம் மெட்ரிக் தொன் பெட்ரோல், டீசலை வழங்க இந்தியன் ஒயில் நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டிஜிட்டல் கரன்சியை பணமாக மாற்றிக்கொள்ள முடியும் இந்தியப் பிரதமர் கருத்தரங்க உரையில் தெரிவிப்பு

இந்தியாவில் ரிசர்வ் வங்கி மூலம் டிஜிட்டல் கரன்சி அறிமுகம் செய்யப்படும் என பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. பிளாக்செயின் தொழில்நுட்பம் உள்ளிட்ட நவீன தொழிநுட்பங்களை பயன்படுத்தி உருவாக்கப்படவுள்ள இந்த டிஜிட்டல் கரன்சி, நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய உந்துசக்தியாக அமையும் என்று மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.



இந்நிலையில், பா.ஜ.க. சார்பில் நடைபெற்ற சுயசார்பு பொருளாதார கருத்தரங்கில் உரையாற்றிய இந்தியப் பிரதமர் மோடி, டிஜிட்டல் கரன்சியைப் பணமாக மாற்றிக்கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார்.

டிஜிட்டல் கரன்சி என்பது நமது தாள் வடிவிலான ரூபாவின் டிஜிட்டல் வடிவமாக இருக்கும். அத்துடன் ரிசர்வ் வங்கியால் கட்டுப்படுத்தப்படும். இது டிஜிட்டல் கரன்சியுடன் தற்போதுள்ள கரன்சியை பரிமாற்றம் செய்யும் ஒரு அமைப்பாகவும் இருக்கும். யாராவது டிஜிட்டல் கரன்சியில் பணம் செலுத்தினால், அதை பணமாகவும் மாற்றிக் கொள்ள முடியும்.

டிஜிட்டல் கரன்சி புதிய வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம், நிதி தொழில்நுட்பத் துறையில் புரட்சியை ஏற்படுத்தும். பணத்தை கையாளுதல், அச்சிடுதல், மேலாண்மை ஆகியவற்றில் சுமையை குறைக்கும், என்றார் பிரதமர் மோடி.

# தாக்கல் செய்யப்பட்டது முதலாளித்துவ பட்ஜெட் முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் விமர்சனம்

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்துள்ள பட்ஜெட் முதலாளித்துவ பட்ஜெட் என்று முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் விமர்சித்துள்ளார்.



மத்திய நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் செய்தியாளர்களைச் சந்தித்து பேசினார். அப்போது அவர், நிதியமைச்சரால் வாசிக்கப்பட்ட முதலாளித்துவ பட்ஜெட் இது. மூலதனச் செலவு, வட்டியில்லாக் கடன் போன்றவை தவிர, வேறெதுவும் குறிப்பிடும்படியாக இந்த பட்ஜெட்டில் இல்லை.

சிறு குறு நடுத்தர தொழில்களை மீட்டெடுக்கும் வகையில் எந்த அறிவிப்பும் பட்ஜெட்டில் இடம்பெறவில்லை. ஏழை எளிய நடுத்தர மக்களின் நலனுக்காக அறிவிக்கப்பட்ட அனைத்து மானியங்களும் தற்போது குறைக்கப்பட்டுள்ளன.

ஏழைகள் என்ற வார்த்தை பட்ஜெட்டில் இரு முறை இடம்பெற்றிருந்தது. இதன் மூலம், ஏழைகளை மறக்காமல் இருந்ததற்கு நன்றி. நாட்டில் ஏழை மக்களும் இருக்கிறார்கள் என்பதை தற் போது தான் நிதியமைச்சர் நினைவு கூர்ந்துள்ளார்.

வரிச்சலுகை குறித்த எந்த அறிவிப்பும் இந்த பட்ஜெட்டில் இல்லை, என்று விமர்சித்துள்ளார்.

# கொரோனா பாதிப்பு குறைந்து வருவதால் மும்பையில் பல தளர்வுகள் அறிவிப்பு!

மும்பையில் தினசரி கொரோனா பாதிப்பு மெல்ல குறைந்து வருகிறது. இப்போதைய சூழலில் நாள் ஒன்றுக்கு 1000க்கும் கீழான எண்ணிக்கையிலேயே கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டு வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு அம்மாநில அரசு, கொரோனா ஊரடங்குக் கட்டுப்பாடுகளில் சில தளர்வுகளை அறிவித்துள்ளது.

அதன்படி, உணவகங்களில் 50 சதவீத வாடிக்கையாளர்கள் அமர்ந்து உணவு உண்ணவும், சினிமாத் திரையரங்குகளில் 50 சதவீத பார்வையாளர்களை அனுமதிக்கவும், கடற்கரை, பூங்காக்கள் போன்ற இடங்களுக்கு செல்ல பொதுமக்களுக்கு அனுமதியும் அளிக்கப்பட்டுள்ளது. கேளிக்கை பூங்காக்கள் மற்றும் நீர் விளையாட்டு பூங்காக்களில் 50 சதவீதமானோருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கலாச்சார நிகழ்வுகள், ஆன்மீக கூட்டங்களில் 50 சதவீதமான அளவிலும், திருமண நிகழ்ச்சிகளில் 25 சதவீதம் பேர் பங்கேற்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. விளையாட்டு நிகழ்ச்சிகளில் 25 சதவீத அளவில் மட்டும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

வாரச்சந்தைகள் வழக்கம் போல செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு, இரவுநேர ஊரடங்கும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# விவசாயிகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை கிழக்கு ஆளுநர் அனுராதா ஜகம்பத் தெரிவிப்பு



இலங்கையில் விவசாயிகளுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை சில ஊடகங்கள் இதைப் பெரிதாகக்காட்டுவதாகவும் ஊடகங்கள் இவ்வாறான விடயங்களில் கூடிய கவனம் செலுத்தவேண்டும் மக்களைக் குழப்புகின்ற நடவடிக்கையில் ஊடகங்கள் செயற்படக் கூடாதென கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் கேட்டுக்கொண்டார்.

மட்டக்களப்புதனியார் பஸ் தரிப்பிடநிலையத்தை மட்டக்களப்பு மாவட்ட வீதி போக்குவரத்து அதிகார சபைக்கு ஒப்படைக்கும் நிகழ்வு நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்றது. இந்தநிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார் .

குறித்த நிகழ்வின்பின் மக்களுக்குத் தெளிவுபடுத்தும் நோக்குடன் தனியார் பஸ்ஸைச் செலுத்திச் சென்று கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் விழிப்புணர்வை வெளிப்படுத்தினார்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அனுமதிப்பத்திரம் இல்லாமல் இயங்கும் பஸ்கள் தொடர்பாக சாரதி நடத்துநர்கள் மகஜர் ஒன்றை கிழக்கு மாகாண ஆளுநரிடம் கையளித்தனர். இந்த விடயம் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் உத்தரவாதமளித்துள்ளார்.

## பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நால்வர் பிணையில் விடுதலை

மட்டக்களப்பு, பெப். 03

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நால்வர் நேற்று ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சட்டமா அதிபரின் ஆலோசனை தொடர்பான கடித்தின் படி குறித்த வழக்கிற்கான நகர்த்தல் மனு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டவேளை ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தின் நீதிபதி கறுப்பையா ஜீவராணியால் பிணை வழங்கப் பட்டள்ளது. கடந்த 2020 நவம்பர் 27,ஆம், 28, ஆம்,திகதிகளில், ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட் பட்ட செங்கலடி சித்தாண்டி ஏறாவூர் மற்றும் ஐயங்கேணி போன்ற பகுதிகளைச் சேர்ந்தபேர் க.சோபனன், யோ. யோகேஸ் வரன் , வ.விவேந்த், க.ஜெக நாதன் ஆகியவர்களே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் முகப் புத்தகத்தில் அரசினால் தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவரின் உருவம் அடங்கிய புகைப்படத்தைப் பதிவிட்டதன் பிரகாரம் ஏறாவூர் பொலிஸாரினால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் செய்யப் பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருடர்கள், தேரர்கள் உட்பட மூவரிடம் தீவிர விசாரணை



காரைதீவு, பெப். 03

பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோக முயற்சி தொடர்பில் கைதான தேரர்கள் உட்பட மூவரிடம் 7 நாள்கள் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்வதற்கு உத்தரவு பெறப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணிக்கு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள இந்தச் சம்ப வம் தொடர்பில் தப்பிச்சென்ற ஏனைய சந்தேக நபர்களைக் கைதுசெய்வதற்கு இவ்வாறு கைதாகிய மூவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ள நிலையில் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டதை அடுத்து மேற்படி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதத்துக்கு முன்னர் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் அமைந்துள்ள நீதிவான் ஒருவரின் வீடு உட்படப் பல வீடுகளில் திருடி வந்த திருடர்கள் காரைதீவு வெட்டு வாய்கால் பகுதியில் பதுங்கியிருந்த நிலையில் அவர்களை மடக்கிபிடிக்க முற்பட்டபோது இடம்பெற்ற துப்பாக்கி சூட்டில் ஒரு திருட்டு சந்தேக நபர் படுகாயமடைந்த நிலையில் வெள்ளை நிற கார் ஒன்றில் இருந்த பௌத்ததேரர் இருவர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அக்கரைப்பற்றில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 3 வீடுகள் உடைத்து சுமார் 30 பவுண் தாலிக் கொடிகளை திருடிய திருடர்கள் தொடர் திருட்டாக டிசெம்பர் 18 ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் நீதிவான் ஒருவரின் வீட்டை உடைத்து 12 பவுண் தங்க ஆபரணத்தைக் திருடியிருந்தனர். இதனைத் தொடர்ந்து நீதிவான் வீட்டில் இடம்பெற்ற திருட்டு மற்றும் ஏனைய திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாகக் திருடர்களைக் கைதுசெய்வதற்காக 4 விசேட பிரிவுகளைக் கொண்ட பொலிஸ் குழுவை அமைத்து இந்த திருடர்களைப் பொலிஸார் வலைவீசித் தேடிவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சந்திவெளியில் வீட்டில் இருந்த சிறுவனைக் காணவில்லை



மட்டக்களப்பு சந்திவெளி பிரதேசத்தைச் சோந்த 15 வயதுடைய சிறுவன் ஒருவர் வீட்டில் இருந்து நிலையில் கடந்த 28 ஆம் திகதி காணாமல் போயுள்ளதாக பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

சந்திவெளி பத்தினி அம்மன் கோவில் வீதி ஜீவபுரத்தைச்சேர்ந்த 15 வயதுடைய அன்ரனி அனுராஸ் என்ற சிறுவன் சம்பவதினமான கடந்த மாதம் 28ஆம் திகதி வீட்டில் இருந்துள்ள நிலையில் காணாமல் போள்ளார்.

கையடக்க தொலேபேசி கவரினுள் வைத்திருந்த இரண்டாயிரம் ரூபா பணத்தை காணவில்லை எனவும் அவரை எங்கு தேடியும் காணவில்லை எனவும் அவரை கண்டுபிடித்து தருமாறும் நேற்று பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சிறுவன் பற்றிய தகவல்கள் தெரிந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அறிவிக்குமாறு பொதுமக்களை பொலிஸார் கோரியுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஊரணியில் விபத்து பெண்ணொருவர் காயம்



*மட்டக்களப்பு - கொழும்பு வீதியின் ஊறணி சந்தியில் மோட்டார்சைக்கிளொன்றும், கோழி இறைச்சிகளை ஏற்றிச் சென்ற சிறிய ரக லொறியொன்றும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.*

*இந்த விபத்து நேற்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளின் சாரதி (பெண்) படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.*

*இதேவேளை விபத்துக்குள்ளான லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மட்டக்களப்பு பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு


# சிங்கள பெரும்பான்மையினப் பிரதேசங்களாக வடக்கு, கிழக்கையும் மாற்றும் சூழ்ச்சித் திட்டம்

## ஜெனிவா கூட்டத் தொடருக்கு சம்பந்தன் எழுதிய கடிதத்தில் விவரிப்பு





வடக்கு, கிழக்கு மாகாணங்களை சிங்கள பெரும்பான்மையினப் பிரதேசங்களாக முனைப்புடன் மாற்றியமைக்கும் திட்டத்தையே இலங்கை அரசு நோக்ககக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் பிரதிநிதித்துவம் வகிக்கும் 47 உறுப்பு நாடுகளின் தூதரங்களின் தூதரகத் தலைவர்களுக்கும் தாம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 49 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் ஆய்வுக்கு எடுக்கப்படவிருக்கையில், 31 ஜனவரி 2022 திகதியிட்டு சம்பந்தன் அனுப்பி வைத்த கடிதத்திலேயே இவ்விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டவை வருமாறு:-

46/1 தீர்மானத்தின் ஏற்பாடுகளுக்கமைய மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகரினால் மேற்கொள்ளப்படும் எழுத்துமூல விளக்கத்திற்குப் பின்னர் இலங்கையின் நிலைமை ஆராயப்படும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத் தொடருக்கான ஒரு முன்னோடியாக இலங்கை நாடாளுமன்றத்திலிருக்கும் மிகப் பெரிய தமிழ் அரசியல் கட்சியின் (தமிழ்த் தேசிய கூட்டமைப்பு) தலைவர் என்ற வகையில் நான் இதனை உங்களுக்கு எழுதுகின்றேன்.

2009ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் ஆயுதம் தாங்கிய இன மோதல் முடிவுற்ற ஒரு வாரத்தினுள் 2009 மே 23 ஆம் திகதி ஐ.நா. செயலாளர் நாயகத்தின் இலங்கைக்கான விஜயத்தின் முடிவில் இலங்கை அரசாங்கத்தினாலும் ஐக்கிய நாடுகளினாலும் ஏனைய பல விடயங்களோடு கூடவே பின்வருமாறு கூறும் ஒரு கூட்டறிக்கை விடுக்கப்பட்டது:

சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கும் இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளுக்கும் அமைவாக, மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமான தனது வலுவான கடப்பாட்டை இலங்கை மீளவலியுறுத்தியது. சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்களைகையாள்வதற்கான ஒருபொறுப்புக் கூறல் நடைமுறையின் முக்கியத்துவத்தை செயலாளர் நாயகம் கோடிட்டுக் காட்டினார். அப்பிரச்சினைகளைக் கையாண்டு தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மேற்காணும் கடப்பாடுகளை கையாண்டுத் தீர்ப்பதற்கு எதுவித காத்திரபூர்வமான நடவடிக்கைகளையும் இலங்கை கடந்த பன்னிரெண்டு(12) வருடங்களில் மேற்கொள்ளவில்லை. இதற்கு இடைப்பட்ட காலத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை 2021 மாரச் மாதம் நிறைவேற்றிய 46/1 தீர்மானத்தோடு, ஏழுதீர்மானங்களை இது வரயில் நிறைவேற்றியுள்ளது. இதனிடையே இலங்கை பெருமளவுக்கு அமுல் படுத்தப்படாத பல்வேறு கடப்பாட்டு அறிக்கைகளை விடுத்துள்ளது.

பொறுப்புக் கூறல் விடயத்தைக் கையாண்டு தீர்க் காதுவிட்டதற்கு மேலதிகமாக, இலங்கை அரசாங்கமானது, இராணுவமயப்படுத் தல், சிவில் சமூக மற்றும் ஊடகத் துறை யினர் மற்றும், குடும்ப உறுப்பினர்கள் அத்துடன், தமது உயிரிழந்த உறவுகளை நினைவுகூரும் ஏனையவர்கள் ஆகி யோரைப் புதிதாகக் கைது செய்வதோடு கூடவே அரசியல் கைதிகளை கால வரையறையற்று தடுத்து வைத்திருத்தல், பல்வேறு அரசாங்க திணைக்களங்களின் செயல்பாடுகள் மூலமாக இடம்பெயர்ந்த தமிழ் மக்களை அவர்தம் காணிகளில் மீளக் குடியேற விடாது தடுத்தல், பாரம் பரிய கூட்டு காணி உரிமைகளையும் கால்நடைகளின் மேய்ச்சல் உரிமைகளையும் மறுத்தல், அரசியல் மற்றும் சிவில் சமூக செயற்பாடுகளை கண்காணித்தலை தீவிரப்படுத்தல் ஆகியன அடங்கலாக இலங்கைத் தமிழர்களை அடக்கி ஒடுக்கும் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

தமிழ் மக்களை அவர் தம் பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து விரட்டியடிப்பதற்கு மேலதிகமாக, தொல்லியல் அகழ்வாரய்ச்சிகள், வன விலங்கு பாதுகாப்பு மற்றும் வனப் பாதுகாப்பு எனும் போர்வையில் தற்போது நடைபெற்று வரும் காணிச் சூறையாடல்தான் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற மிகவும் பாரதூரமான ஆபத்தாகும்.

பிரதேச எல்லைகளை மீள் வரையறை செய்தல் மற்றும் எதிர்காலத்தில் தமிழர் பிரச்சினையின் எந்த ஒரு தீர்வையும் அர்த்தமற்றதாக்கும் வண்ணம் வரலாற்று ரீதியான தமிழ் பேசும் பகுதிகளை சிங்களக் குடியேற்றாளர்களைக் கொண்டு குடியேற்றல் நிகழ்ச்சித் திட்டமொன்றில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இந்த நிச்சயமற்ற நிலைமையில், தமிழ் மக்கள் தமது பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு நாட்டை விட்டுச் சென்று வெளிநாடுகளில் தஞ்சம் நாடுகின்றனர்.

இலங்கை அரசாங்கத்தின் இச் செயற்பாடுகள், தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களைதமது வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசங்களாகக் கொண்டு, ஐக்கிய, பிரிபடாத இலங்கையினுள் வாழ்ந்துவரும் ஒரு மக்கள் குழுமத்தினர் என்று உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எண்ணக்கருவை தோற்கடித்து, அதன் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒரு சிங்கள பெரும்பான்மையின பிரதேசங்களாக முனைப்புடன் மாற்றியமைக்கும் எண்ணம் கொண்டவையாகும். 46/1 ஆம் இலக்க தீர்மானம் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடுகள் தொடர்பாக அதன் செயலாற்றுகையை மதிப்பிடுமுகமாக ஐ.நா மனித உரிமைகள் பேரவை 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கூடுகின்ற போது, மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான தனது கடப்பாடுகளில் இலங்கை அரசாங்கம் தவறிவிட்டதென்பதையும் அம் மீறல்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான ஒரே உறுதியான வழியாக தமிழ்த் தேசியப் பிரச்சினையைக் கையாண்டு தீர்ப்பதற்கு அது எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்பதையும் தெளிவாக எடுத்துரைக்குமாறு உறுப்பு நாடுகளை நான் வலியுறுத்துகிறேன்.

கலந்துரையாடல் தொடர்களில் உங்கள் கருத்துக்களை முன்வைத்து, பொறுப்புக்கூறல் மற்றும் தமிழர் தேசிய பிரச்சினையைத் தீர்த்து வைத்தல் ஆகியன தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின்கடப்பாடுகளுக்குஇயைந்தொழுகுமாறு அதனை வலியுறுத்துமாறும், இலங்கையில் உள்ள தமிழ் மக்களாகிய நாங்கள் ஒரு ஐக்கிய மற்றும் பிரிபடாத இலங்கைக்குள் எமது வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசமாகிய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுய மரியாதையோடும் கண்ணியத்தோடும் பாதுகாப்புடனும் வாழ்வதை உறுதிப்படுத்துமுகமாக இலங்கை அரசாங்கத்தை அதன் அனைத்து வாக்குறுதிகளுக்கும் அமைவாக சரியான திசையில் நகர்வதற்கு தூண்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தமிழ் மக்கள் உங்களைக் கேட்டுக்கொள்கின்றனர். - என்று உள்ளது.

# மகன் கைதானமையால் பதவிவிலகுகிறார் அருந்திக!



பதவியிலிருந்து விலகுகிறார் என இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ராகம மருத்துவபீட மாணவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் அவரது மகன் (வியாழக்கிழமை) காலை கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், மேற்படி சம்பவம் தொடர்பான முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் வரை தான் பதவி விலகுகிறார் என அவர் அறிவித்துள்ளார்.

ராகம மருத்துவ பீட மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகத் தனக்கும் தொடர்பு இருக்கின்றமை நிரூபிக்கப்பட்டால், தான் பதவியை இராஜினாமாச் செய்வேன் என இராஜாங்க அமைச்சர் முன்னதாகத் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பூஸ்டர் பெற்ற எவரும் கொழும்பில் சாகவில்லை

கொழும்பு, பெப். 03

ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இதுவரையில் கொழும்பு மாநகரத்திற்குள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்கள் எவரும் உயிரிழக்கவில்லை என்று கொழும்பு மாநகரசபை தெரிவித்துள்ளது.

மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி ருவன் விஜேயமுனி இது தொடர்பாக இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள் ளார்.

இதுவரையில் தடுப்பூசி மருந்தைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் விரைவாக அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு இதன் போது அவர் தெரிவித்துள்ளார்.

# நிறையப் பிரச்சினைகள் ஜனநாயகத்தில் உள்ளன

## மைத்திரி தெரிவிப்பு

எதிர்வரும் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணியான போட்டியிடுவதற்கான திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது என முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்த நோக்கத் துக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்கனவே தனது தேர்தல் சபைகளைப் பலப்படுத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார். கண்டி யில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனநாயகம் பற்றி நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.02.2022இல் வெளியிடப்பெற்றது.